**செய்தி வெளியீடு எண்: 712** **நாள்: 25.10.2017**

## தமிழ் தமிழர்களின் வாழ்வியல் ஆவணம்

தமிழ் வளர்ச்சித் துறையின் இளந்தமிழர் இலக்கியப் பட்டறையில் பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் பேச்சு

தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பாக 23.10.2017 முதல் 29.10.2017 வரை இளந்தமிழர் இலக்கியப் பட்டறை நடைபெறுகின்றது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடைபெறுகின்ற இந்நிகழ்வில் தமிழகம் முழுவதிலுமிருந்து கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 200 மாணவர்களுக்குப் பயிற்சி வழங்கப்படுகின்றது. 25.10.2017 அன்று நடைபெற்ற நிகழ்வில் பேராசிரியர் கு. ஞானசம்பந்தன் அவர்கள் **"மேடைத்தமிழ்"** என்ற தலைப்பில் உரையாற்றினார். இந்நிகழ்வின் துவக்கமாக, தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் திரு. இரா. வெங்கடேசன், தமிழ்நாடு கடலோரக் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு.சின்னசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

**தமிழ்** வளர்ச்சித்துறை மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் திரு.இரா.வெங்கடேசன் பேசும்போது வருங்காலத் தலைமுறையினராகிய இளைஞர்களிடையே தமிழ் ஆர்வத்தைத் தூண்டும் இந்த இலக்கியப்பட்டறையில் வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியும் பெருமையும் ஒருசேர அடைகிறேன் என்றார். நான் மாணவனாக இருந்தபோது இதுபோன்ற பட்டறைகள் இல்லை. ஆனால், மாணவச் செல்வங்களாகிய நீங்கள் இந்த நல்வாய்ப்பைப் பெற்றிருக்கிறீர்கள். தாய்மொழி வழியில் தமிழ் கற்க மாணவர்கள் ஆர்வம் காட்ட வேண்டும். அதற்கான அவசியம் இந்த இளந்தமிழர் இலக்கியப் பட்டறையில் மாணவர்கள்முன் வைக்கப்படுகிறது. தமிழகம் எங்கும் மாணவர்கள் இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் கிடைக்காத அரிய வாய்ப்பு உங்களுக்கு கிடைத்திருப்பது வரப்பிரசாதம். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தித் தாய்மொழியான நம் தமிழ்மொழியில் ஆளுமை மிக்கவர்களாக விளங்கவேண்டும் என்று மாணவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தார்.

அடுத்து வாழ்த்துரை வழங்கிய கடலோரக் காவல்துறை கண்காணிப்பாளர் திரு.சின்னசாமி அவர்கள், "**தமிழ்** அழியாது; தமிழுக்குத் தன்னை ஆக்கப்படுத்தும் சக்தி இருக்கிறது. கூடுதல் சக்தியாக, தமிழார்வமும் ஆற்றலும் மிக்க மாணவர்கள் இந்த பட்டறையின் வாயிலாக உருவாக்கப்படுவதைப் பார்க்கும்போது தமிழின் வருங்காலம் வசந்தகாலமாக இருக்கும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை" என்று அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சியாக **"மே**டைத்தமிழ்" என்ற தலைப்பில் பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் அவர்கள் உரையாற்றும்போது, புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் விருது வாங்கிய தருணத்தில் அடைந்த மகிழ்ச்சியை இந்தப் பட்டறையில் பேசும் தருணத்திலும் நான் அடைகிறேன்.

தமிழில் பேசுவது மக்களிடையே குறைந்துவிட்டது. தாய்மொழியாகிய தமிழில் பேசவேண்டும். அதற்கான களத்தை இந்தப் பட்டறை ஏற்படுத்தி இருக்கிறது. அயலகத் தமிழறிஞர்களாகிய

வீரமாமுனிவரும், ஜி.யு.போப் அவர்களும் தமிழ்மேல் கொண்ட பற்று அளவிட முடியாதது. நான் திருவாசகத்தைப் படிப்பதற்காகவே தமிழ்நாட்டில் பிறக்கவேண்டும் என்று ஜி.யு.போப் கூறியாமையை மாணவர்களிடம் தெரிவித்தார்.

உணர்ச்சிமிக்க பேச்சு மொழியின் எழுச்சியை நிர்ணயிப்பதோடு, பார்வையாளர்களைக் கவரும் தன்மை கொண்டது. தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பாக அரபு மொழியில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட திருக்குறளை ஓசை மாறாமல் ஒலிபெயர்த்துத் தமிழிலும் அரபியிலும் வெளியிடவேண்டும். அது அரபி மொழியைச் சார்ந்தவர்கள் தமிழின் இனிமையை அறிந்துகொள்ள ஏதுவாக அமையும். பேச்சுத் துறையில் ஆர்வம்மிக்க மாணவர்கள் அவையில் கல்வெட்டுப்போல் பதியக்கூடிய செய்திகளைப் பதிவு செய்தல் வேண்டும். குறித்த நேரத்தில்பேச்சைத் தொடங்குவதும் குறித்த நேரத்தில் பேச்சை முடித்துக் கொள்வதும் பேச்சுக்கும் பேச்சாளனுக்கும் அழகு சேர்க்கும் என்று தெரிவித்தார். இளந்தமிழர் இலக்கியப் பட்டறை போன்ற ஒரு மொழி ஆக்கப் பட்டறையில் தமிழ் நுணுக்கங்களைக் கற்கும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைக்கவில்லை. இந்த வாய்ப்பைப் பயனுள்ளதாக மாற்றிக் கொள்வதோடு, இடம், பொருள், காலம், அறிந்து கவனமாகப் பேசும் கலையையும் மாணவர்கள் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

எள்ளைக் கொட்டினால் அள்ளமுடியும். சொல்லைக் கொட்டினால் அள்ளமுடியாது. அடி விழுந்தால்தான் சிற்பம் வரும். மேடை அச்சம் தவிர்த்தல், கேள்விகளை எதிர்கொள்ளும் தைரியம் மாணவர்களாகிய உங்களைத் தமிழகத்தின் தலைசிறந்த பேச்சாளர்களாக மாற்றும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. இத்தகைய நல்வாய்ப்பை வழங்கிய தமிழக அரசுக்கு நீங்கள் வாழ்நாள் நன்றி கூறக் கடன்பட்டிருக்கிறீர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சித்துறை மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் (பொ) முனைவர் கோ.விசயராகவன், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்குநர் முனைவர் கோ.செழியன், மொழிபெயர்ப்புத் துறை இயக்குநர் முனைவர் ந. அருள், சென்னைப் பல்கலைக்கழக அரபுமொழித் துறைப் பேராசிரியர் திரு. அ.ஜாகிர்உசேன் ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழ் வளர்ச்சி இயக்குநர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**